# ஹம்பாந்தோட்டை பிரதேச சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2013 ஒக்டோபர் 29 வரை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயற்திறன் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை

2013 ஜுலை 18 வரை வழங்கப்பட்ட 30 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2013 செப்டெம்பர் 10 வரை பதில் வழங்கப்படவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களது கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி ரூபா 52,775,071 ஆகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருவாய் நிர்வாகம்

#### 2.1.1 பொது வரி

2011 ஆம் ஆண்டிற்கென நவ மயுரபுர வாரச் சந்தையைக் குத்தகைக்குப் பெற்ற குத்தகையாளர்கள் 2011 பெப்ரவரி 7 முதல் 2011 பெப்ரவரி 28 வரையான காலப்பகுதிக்கு ரூபா 43,759 குத்தகையைச் செலுத்தவில்லை.

#### 2.1.2 கடை வாடகை

2012 முடிவில் உள்ளவாறு 12 பெல்லகஸ்வெவ கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 138,600 நிலுவை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வழங்கப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்படாதிருக்கும் காலங் கடந்த ரூபா 78,838 பெறுமதியான 20 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

(அ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 218 ஆம் விதியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் தொடர்பாகக் கணிப்பு மேற்கொள்ளப்படாததால் சபைக்குச் சொந்தமான காணிகளையும் கட்டிடங்களையும் முறைப்படி இனங்காண முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. காணி மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமாக பீஎஸ் - 46 மாதிரிப் படிவத்திற்கமையப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 203 மற்றும் 214 ஆம் விதிகளின் பிரகாரம் பட்டோலைப் பொருட்களது கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டிற்கான பட்டோலைப் பொருட் கணிப்பு 2013 மார்ச் 15 வரை நடைபெறவில்லை.

## 2.5 கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்தலும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளும்

(அ) 2011 ஆம் ஆண்டின்போது 45 கட்டிட விண்ணப்பங்களும் 2012 ஆம் ஆண்டின் போது 16 கட்டிட விண்ணப்பங்களும் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றுள் நிர்மாண வேலை முடிவடைந்திருந்த வீடுகளை இணங்கண்டு, அவை அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளதற்கான இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம், முடிவடைந்த புதிய நிர்மாணிப்புகளுக்குத் தீர்வையும் வரியும் மதிப்பிடப்பட்டு அறவிடப்படுவதற்கு இயலாதிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் மேலதிக அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளுடன் தொடர்புடைய கோவை கணகாய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 2013 மார்ச் 15 ஆந் திகதியளவிலான பொது மக்களது புகார்களின் பிரகாரம் 4 அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அறிவிக்கப்பட்டிருந்தன. 3 சந்தர்ப்பங்களில் நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் இடம் பெற்ற இடங்கள் எழுத்து மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச